DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

STC. No. 2282/2019

PROSECUTION WITNESS LW 10/PW 6

| | | | |
|---|---|---|---|
| Name | : சேகர் | Caste | : |
| Father's Name | : பழனியப்பன் | Calling | : |
| Husband's Name | : | Religion | : |
| Village | : | Age | : |
| Taluk | : | | |

1 ம் எதிரி ஆஜர். 2 ம் எதிரி ஆஜர் இல்லை. 2 ம் எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 06.08.2024.

**முதல் விசாரணை**

1) நான் 19 ரோட்டில் குடியிருந்து கொண்டு பேக்கரியில் பணிபுரிந்து வருகிறேன்.

2) சுமார் 4 வருடங்களுக்கு முன்பு நான் வீட்டிலிருந்தேன். போலீசார் வந்து விசாரித்தற்காக கையெழுத்து கேட்டனர். கையெழுத்து போட்டேன். போலீசார் என்ன செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. **(அந்த பார்வை மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது. இந்த கையெழுத்தும் போலீசார் வாங்கினார்கள் ஆனால் எதற்காக வாங்கினார்கள் என்பது எனக்கு தெரியாது. **(கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161 ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை:

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

1) 05.02.2018 ல் ஏற்பட்ட பிரச்சனைக்காக 06.02.2018 அன்று போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் தயார் செய்து அதற்காக பார்வை மகஜரில் கையொப்பம் பெற்றார்கள் என்றால் இல்லை. சம்பவ இடத்தில் இருந்து போலீசார் குச்சி ஒன்றை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றினார்கள் என்றால் எனக்கு தெரியாது. எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**